பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 80 பங்குனி 15 ரபி அவ் 18 }இதழ் 46
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-3-7

கோழிப்பண்ணைக் காரருக்கு
ஓர் அறிவித்தல்
முட்டை இன்று 56 சதத்திற்கு வாங்கப்படும்.
(5மைல் சுற்றளவுக்குள் வந்து வாங்கப்படும்.)
கண்ணன்
களஞ்சியம்
மில்க்பாருக்கு அருகாமையில்
40, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## ஹாக்கி 'பாபு' தற்கொலை!

புதுடில்லி, மார்ச் 27

பழம்பெரும் இந்திய ஹாக்கி ஆட்டக்காரரான "பாபு" என்று அழைக்கப்படும் கே டி சிங் [67 வயது] நேற்று தற்கொலைசெய்துகொண்டார்.

தம்மைத்தாமே துப்பாக்கியால் சுட்டு இவர் தற்கொலைசெய்துகொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

1948ல் நடைபெற்ற ஹாக்கி ஒலிம்பிக் போட்டியில் 'பாபு' உதவிக் காப்டனாக இருந்தார், 1952ல் இந்தியா பெரும் வெற்றியீட்டுவதற்கு இவர்தான் காரணமாக இருந்தார், இவர் கடந்த இலமாதங்களாக நோயுற்றிருந்தார்.

# யாழ் மாவட்டத்தில்
# ஆயிரம் வீடுகள்; அரசு அங்கீகாரம்!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டத்தில், ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் அமையும் வீடுகளுக்கு, ஓரளவான மூலப் பொருட்களை வீடமைப்புத் திணைக்களம் வழங்கும்.**

''புதிய வீடமைப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் வீடுகளுக்கு, வீடமைப்பு இலாகா 8000 ரூபாய்க்கு மூலப்பொருள்கள் காலதாமதமின்றி வழங்கப்படும். மிகுதியை கட்டிடச் சொந்தக்காரர் தாமே பொறுப்பேற்க வேண்டும் இதற்காகப்பெறும் கடன் தொகைக்கு, 15 ரூபா மட்டுமே மாதாமாதம் பொதுமக்கள் அரசுக்கு செலுத்த வேண்டும். இந்த உத்தரவை பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா எமக்குவழங்கியுள்ளார்'' என்று யாழ். மாவட்ட வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. எம். இராஜரட்ணம் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக, இம்மாத இறுதியில் 50 வீடுகளுக்கு காரைநகரில் அடிக்கல் நாட்டப்படும். இதனைத் தொடர்

[6-ம் பக்கம் பார்க்க]

## ஆணாக மாறிய பெண்!

(மட்டுவில்)

சுமார் 15 வயதுள்ள ஒரு ஆண், திடீரென பெண்ணாக மாறினர்!

இந்தச் சம்பவம் நேற்றிரவு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலில் நிகழ்ந்தது

நேற்றிரவு சுமார் எட்டு மணியளவில் அம்மன் கோயிலுக்கு வந்திருந்த பெற்றோர் அரவணைப்பிலிருந்த ஐயாத்துரை குணராணி என்ற பத்து மாதக் குழந்தையின் கையிலிருந்த அரைப்பவுண் காப்பை ஒரு இளைஞன் அபகரித்துவிட்டான். இச்சம்பவம்; அங்கு சிவில் உடையில் நின்ற பொலிஸ் சார்ஜன்ட் எஸ். நவரத்தினத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதும், அவர் செயலில் இறங்கினர். சுமார் 150 யார் தூரம் வரை ஒரு இளைஞனைத் துரத்திச் சென்று மடக்கிப்பிடித்து இறுதியில் அவனிடம் காப்பைக் கண்டெடுத்தார். ஆனாலும் இந்த இளைஞன்மீது ஏற்பட்ட சந்தேகம் சார்ஜண்டுக்குத்தீரவில்லை. இவனிடம் மேலும் சில களவுப் பொருள்கள் இருக்கலாம் என்று எண்ணி இளைஞனை சோதனை போடத் தொடங்கினர்.

சோதனை தொடங்கிய சற்று நேரத்தில் பொலிஸ் சார்ஜன்ட்திகைத்துப்போய் விட்டார்!

காரணம், அந்த இளைஞன் பெண்ணாக மாறத் தொடங்கிவிட்டான்!

அரைக்காற்சட்டையும், ஷேர்ட்டும் அணிந்திருந்த இளைஞனைசோதனைபோடத் தொடங்கியதும், அது இளைஞனல்ல யுவதி என்ற விபரம் தெரியவந்தது!

இதனைத் தொடர்ந்து சார்ஜன்ட் சிவலிங்கம், மாஜிஸ்திரேட் டி ஜே யாலசிட்ணர் முன்னிலையில் நேற்றிரவு ஆஜர்செய்தார். திருட்டுக்குற்றத்தை ஒப்புக் கொண்ட இப்பெண்ணை கைதடி இரட்சணியசேனையில் ஒப்படைக்குமாறும், அடுத்தமாதம் 3ம் திகதி தாம் தீர்ப்பு வழங்குவதாகவும் மாஜிஸ்திரேட் தெரி

[6-ம் பக்கம் பார்க்க]

## சமரசம் ஏற்படுத்த தொடர்ந்துமுயற்சி

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் இரு பிரிவினருக்குமிடையில் மீண்டும் நேற்றுக்காலை ஏற்பட்ட மோதல், பொலிஸாரின் தலையீட்டினுல் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு விட்டதாக உதவிபொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராசா நேற்றுக் கூறினர்.

நேற்று நடந்த சம்பவத்தில் சில வீடுகள் தீக்கிரையாகின என்றும் சிலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

பாதிக்கப்பட்ட நாவாந்துறைப் பகுதியில் நேற்று உத்தியோகப் பற்றற்ற முறையில் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டது. இந்த நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து மக்கள் நடமாட்டம் இன்று காலை ஆறுமணிவரை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இரு பிரிவினருக்குமிடையில் ஒரு சமாதான மாநாட்டை நடத்துவதற்கான முயற்சி செய்யப்பட்டு வருவதாகவும், அநேகமாக இன்று அல்லது நாளை சமரசப் பேச்சுக்கள் நடைபெறும் என்றும் தெரிய வருகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த சம்பவங்களைத் தொடர்ந்த, நேற்றுக்காலை இரு பிரிவினரையும் கொண்ட சமாதான மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும், அம்மாநாடு திட்டமிட்டபடி நடைபெறவில்லை

நாவாந்துறைப் பகுதியில் பொலிஸார தொடர்ந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. வெ யோகேஸ்வரன் இரு பிரிவினருக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக் காலை மீண்டும் மோதல் ஏற்பட்டதும் பொலிஸ் அதிபர் திரு. டக்ளஸ், ரண்முத்துகல, உதவி பொலிஸ் அதிபர் திரு ஆனந்தராசா, மற்றும் பொலிஸ் கோஷ்டியினர் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்றனர். தீயணைக்கும் கருவிகளும் அனுப்பப்பட்டன

பொலிஸ் அதிபர் திரு டக்ளஸ் ரண்முத்துக்கலவுடன் ''ஈழநாடு'' நேற்றிரவு தொடர்பு கொண்டபோது;

''நிலைமை கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கிறது. போதுமான பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரு பிரிவினருக்கு மிடையே சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன'' என்று தெரிவித்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## விசுவமடு குடியேற்றத்திட்டம்:
# அகதிகளை எதிர்நோக்கும் பிரச்னைகள்!
### இரண்டுமாதத்தில் அறுவர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

**விசுவமடுவிலிலுள்ள அரசாங்க அகதிகள் குடியேற்றத் திட்டத்தில் கடந்த இரு மாதகாலத்திற்குள் 6 பேர் மரணமடைந்துள்ளனர்.**

அங்கு சுகாதார வசதியோ, குடிநீர்வசதியோ எதுவும் இல்லாததினுல், அகதிகள் தினமும், கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர்.

### 200 குடும்பங்கள்

இத்திட்டத்தில் சுமார் 1000 பேர்களை கொண்ட 200 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

அமெரிக்கா வழங்கிய கூடாரத்திற்குள்ளேயே இக் குடும்பங்கள் வாழ்கின்றன

இக்குடியேற்றத்தை சேர்ந்த 'இ' காம்பபிலுள்ள எஸ். இராசதுரை, வி. அடைக்கன் ஆகியோர் நேற்று அரசாங்க அதிபர் திரு. ஏ.ஏ.ஜோசப்பை சந்தித்து தங்கள் குறைகளை எடுத்துக்கூறினர்கள்.

### ரூ. 50 மட்டுமே வழங்கப்பட்டது

ஒருவருக்கு வாரத்திற்கு அரைக்கொத்து அரிசியும் மாதத்திற்கு 50ரூபா மட்டுமே, சமூக சேவைப் பகுதியினரால் வழங்கப்பட்டுவருகிறது.

அரிசிகிடைத்தன்றுமட்டுமே சாப்பாடு என்றும் அடுத்த நாள் பாண்தான் என்றும் மற்றநாட்கள் பட்டினியென்றும். திரு. எஸ் இராசதுரை தெரிவித்தார்.

( ம் பக்கம் பார்க்க)

# இறுதிவரைஉறுதியுடன்நின்று உரிமைகளை பெற்றே தீருவோம்
— அ. அமிர்தலிங்கம்

(வெள்ளவத்தை)

''ஓர் இனத்தை இன்னொரு இனம் அடித்து வீழ்த்துவதோ அல்லது அந்த இனத்தை அடியோடு இல்லாதொழிக்கச் செய்வதோ முடியாத காரியம். இதனைவரலாறு நமக்கு புகட்டுகின்றது. ஒரு இனம் ஒருநாடு ஒருமொழி சித்தாந்தத்தை செயல்படுத்தமுனைந்த ஹிட்லரால் யூத இனத்தை அழிக்க முடியவில்லை. ஆனுல் ஹிட்லரும் அவரது சித்தாந்தமும் தான் அழிந்தன''

இவ்வாறு வித்தியோதய வளாக கருத்தரங்கில் உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்

மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு திரு ம சுட்பிரமணியம்தலைமைவகித்தார். செல்வி விமலாதேவி தமிழ் வாழ்த்து இசைக்க வளாகத்தலைவர் பேராசிரியர் ரியூலி த சில்வா ஆசியுரை வழங்கினர். திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''ஒரு பெரிய இனம் சின்ன இனத்தை அடிப்பதோ அல்லது கடலீகரம் செய்வதோ முடியாது அப்படி அவர்கள் செய்ய முற்படுவார்களானுல்

6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இந்தியன் அயன்சேவ் (IRON SAFE) உடனடியாக விற்பனைக்குண்டு. விபரம்: சி சிவப்பிரகாசம், ஞானவைரவர் வீதி, உரும்பராய் கிழக்கு, உரும்பராய். 8877

### தேவை

ஸ்ரீலங்கா புகையிலைக் கைத்தொழில் கூட்டுஸ்தாபனத்தின் தயாரிப்பான "ஜனதா பீடி" சுற்றுவதில் அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண்பிள்ளைகள் எம்முடன் தொடர்பு கொள்க. அரியகுணராசா, இரும்பு மதவடி, வதிரி, கரவெட்டி. 8819

ஸ்ரீலங்கா புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பான "ஜனதா பீடி" சுற்றுவதற்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண்பிள்ளைகள் எம்முடன் தொடர்பு கொள்க. "ராணி பவனம்" ஸ்ரீ ரஞ்சன வீதி, கிராமக்கோட்டடி, புலோலி. 8820

நீர்வேலி கேராலிவத்தை ஒழுங்கையில் மூன்றுவதாக அமைந்துள்ள 8¼ பரப்புக் காணியும், புதியவீடும், தனிக்கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். S ஆனந்தன், தச்சர் மடத்தடி ஒழுங்கை, நீர்வேலி 8868

தற்காலிகமாகத் தையல் வேலைக்குப் புதுவித ஆடைகளைத் தைப்பதில் திறமையும் அனுபவமும் உள்ள ஒருபெண் தேவை. எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8881 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 8881

### தவறிவிட்டது

நாவாந்துறை கோயில் அல்லது யாழ்ப்பாணம் டாக்டர் பிலிப்ஸ், டாக்டர் ஆபிரகாம் வைத்தியசாலைகட்கு அருகாமையில் மூக்குக்கண்ணாடி காணாமல் போய்விட்டது. கண்டெடுத்து தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். சுவாமி இம்மனுவேல் 19, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். 8883

உரும்பராய் சந்திக்கு அருகாமையில் பஸ் ஸ்ராண்டில் 26-3-78 எனது கூடிய தொகைப்பணம் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் ரூபா 200/- வழங்கப்படும். க. செல்வரத்தினம், உரும்பராய் தெற்கு, உரும்பராய். 8885


### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அளவெட்டி அழகொல்லைவிநாயகர் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நாளை நடைபெறுகின்றன.

இவ்வைபவத்தை யொட்டி 12 தினங்கள் மாலை கந்தப் புராண விரிவுரையை பௌராணிக வித்தகர் பிரமஸ்ரீ குகசர்மா நிகழ்த்துவார்.


## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## மலிவு விலையில் பொருட்கள் விற்பனை

வேலணை ப நோ. கூ. சங்கத்தில் தேங்கிக்கிடந்த சப்பாத்து வகைகள், அலுமினியப் பொருட்கள், பிடவை வகைகள், கிளாஸ், இமினி வகைகள் சகாய விலையில் மேற்படி சங்க மொத்த நிலையத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானோர் சங்க வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்

வேலணை.

25-3-78 8886

## கைதடி
## கிராமாட்சி மன்றம்
## வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1978

பின்வரும் விடயங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு இவ்வலுவலகத்தோடு தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரசித்திபெற்ற வழங்குநர்கள் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) எழுதுகருவி வகைகள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், அச்சிடுதல், கோலவுடைகள், தோட்டி வேலைக்குரிய களஞ்சியப் பொருட்கள்

(2) கட்டடங்களைப் பழுது பார்த்தலும் பேணலும், தளபாடம் அலுவலக உபகரணம் முதலியன பழுதுபார்த்தல், ரூபா 5000/-த்திற்குக் குறைந்த செலவேற்படக் கூடிய சிறிய வேலைகளை நிறைவேற்றுதல்.

மேற்படி விண்ணப்பங்களை 7 4-78ந் திகதியன்றோ, அல்லது அதற்கு முன்னதாகவோ இவ்வலுவலகத்திற் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும். மேலும் விபரங்கள் தேவைப்படின் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்

ஏ ஏ. யோசெப்,
விசேட ஆணையாளர்,
கிராம சபை, கைதடி.

கைதடிக் கிராம சபை
அலுவலகம்,
கைதடி. 21-3-78. 8882


# வ.மா. ஆசிரிய சங்கம் இன்று வைரவிழா கொண்டாடுகிறது

கல்விமான்களும், தேசிய விடுதலை இயக்க முன்னோடிகளுமான ஹன்டி பேரின்பநாயகம், நெவின்ஸ் செல்வத்துரை, ஜே. வி. செல்லையா, வீ வீரசிங்கம், ஏ. எம். கே. குமாரசாமி, ரி ரி. ஜயரத்தினம் ஆதியாம் பெருமக்களாலும், திருவாளர்கள் ஐ பி. துரைரத்தினம், கே. நேசையா கே. பூரணம்பிள்ளை, வி சுப்பிரமணியம், ஏ வைத்தியலிங்கம், என். சபாரத்தினம், ஏ எஸ். கனகரத்தினம் ஆதியாம் செயல்வீரர்களாலும் கட்டி வளர்க்கப்பட்ட வடமாகாண ஆசிரியர் சங்கம் தனது வைரவிழாவை இன்று செவ்வாய்க்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறது.

சங்கத்தின் தலைமைப் பீடத்தை நான்குதடவைகள் அலங்கரித்தவரும், அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராகத் திகழ்ந்தவருமாகிய அமரர் ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் 79வது பிறந்த தினமாகிய இத்தினத்தில் வைரவிழாக் கொண்டாடப்படுவதும், வைரவிழாவையொட்டி வ மா ஆ. ச வெளியிடும் மலரை அமரர் ஹன்டி அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்திருப்பதும் மிகப் பொருத்தமானவையாகும்.

கடந்த அறுபது ஆண்டுகளாகத் தனித்தும், அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தோடு இணைந்தும், 1972இன் பின்னர் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளையாகவும் வ மா. ஆ. ச. நடாத்திய கொள்கைப் போராட்டங்களும், ஒழுங்கு செய்த கருத்தரங்குகளும் ஆசிரியர் தொழிற்சங்க வரலாற்றில் மட்டுமல்ல, பொதுவாகத் தொழிற்சங்கங்களின் வரலாற்றிலும் மைல் கற்களாக அமைந்துள்ளன.

வைரவிழாவில் இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் எச். என் பெர்னாண்டோ, திருவாளர்கள் ஆர். சிவநேசன், ஆர். பானுதேவன், வி. சிவசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்துவார்கள்.

வைரவிழா மலரின் ஆசிரியர் குழுத் தலைவர் திரு. து. விசுவநாதன் மலரை வெளியிட்டு உரைநிகழ்த்துவார். ஆசிரியர் சங்க முன்னாள் பிரமுகர்கள் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்வர்.

ஆசிரியர்களின் உரிமைகளைப் பேணவும், மேலும்வென்றெடுக்கவும் வ. மா. ஆ. சங்கம் தன் சக்தியினைப் பயன்படுத்துவதாக.

க. இராசநாயகம்
(முன்னாள் தலைவர்
வ. மா. ஆ. ச.)

## சுவீப் முடிவுகள்

(ஹட்டன்)

ஹட்டன் விளையாட்டரங்கில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 656-வது தேசிய சுவீப் முடிவுகள்!

1-வது பரிசு
**06 H 0413**
ரூபா 1,00,000

2-வது பரிசு!
**33 A 0341**
ரூபா 40,000

3-வது பரிசு!
**22 S 5572**
ரூபா 10,000

தலா ரூபா 1,688.25 பெறும் 100 ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 66 A 0293 | 25 B 0094 |
| 26 B 0199 | 41 B 0398 |
| 03 C 6671 | 08 C 0877 |
| 17 C 0627 | 36 C 0632 |
| 37 C 0158 | 43 C 0570 |
| 56 C 0077 | 10 D 0339 |
| 14 E 0275 | 44 E 0585 |
| 51 E 0858 | 59 E 0620 |
| 64 E 0066 | 64 E 0354 |
| 04 F 0563 | 24 F 0116 |
| 32 F 0350 | 61 F 0962 |
| 64 F 0864 | 69 F 0116 |
| 35 G 0903 | 45 G 0447 |
| 49 G 0290 | 11 H 0731 |
| 13 H 0048 | 14 H /579 |
| 35 H 0776 | 38 H 0938 |
| 65 H 0128 | 04 J 0738 |
| 07 K 0248 | 59 K 0195 |
| 21 L 0377 | 21 L 0791 |
| 24 L 0798 | 01 M 0444 |
| 41 M 0452 | 63 M 0779 |
| 64 M 0873 | 20 N 0365 |
| 20 N 0962 | 23 N 0558 |
| 44 N 0626 | 01 O 0162 |
| 18 O 0753 | 25 O 0548 |
| 33 O 0157 | 45 O 0298 |
| 45 O 0819 | 01 P 0117 |
| 01 P 0171 | 11 P 0861 |
| 36 P 0539 | 45 P 0376 |
| 62 P 0266 | 06 Q 0544 |
| 06 Q 0937 | 12 Q 0647 |
| 18 R 0728 | 36 R 0020 |
| 69 R 0173 | 03 S 0402 |
| 06 T 0880 | 06 T 0905 |
| 39 T 0744 | 40 T 0024 |
| 53 T 0431 | 55 T 0191 |
| 59 T 0051 | 66 T 0409 |
| 27 U 0983 | 37 U 0941 |
| 40 U 0243 | 41 U 0514 |
| 43 U 0183 | 48 U 0487 |
| 66 U 0432 | 41 U 0478 |
| 52 V 0708 | 57 V 0375 |
| 03 W 0795 | 16 X 0276 |
| 24 X 0946 | 32 X 0356 |
| 32 X 0976 | 40 X 0645 |
| 51 X 0656 | 63 X 0508 |
| 10 Y 0613 | 58 Y 0599 |
| 11 Z 0686 | 16 Z 0243 |
| 23 Z 0778 | 24 Z 0570 |
| 36 Z 0010 | 63 Z 0802 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை)

சாவகச்சேரியில்

## குமாரசாமிக்கு நினைவுச் சின்னம் எழுப்பத்தீர்மானம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரியில் அமரர் குமாரசுவாமிக்கு நினைவுச் சின்னம் அமைப்பதென, நேற்று சாவகச்சேரி சரஸ்வதி பூங்காவில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டு, இதற்கெனக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் ஏப்ரல் 9ம் தேதி சாவகச்சேரியில் சர்வசமய ஆலயங்களில் வழிபாடும், அன்னதானமும் நடத்துவதென்றும் இரவு சாவகச்சேரியில் அஞ்சலிக்கூட்டம் நடத்துவதென்றும் வானொலியில், அன்றைய தினம் அஞ்சலியுரை நிகழ்த்த ஏற்பாடு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அன்றைய தினம் மலர் ஒன்று வெளியிடுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

[5ம் பக்கம் பார்க்க]




உலகத்தின் பலபாகங்களிலும் கடவுளால் வல்லமையாய் உபயோகிக்கப்படும், பிரபல

அமெரிக்கச் சுவிசேஷகர்,

சங். ஆதர் மில்லர்

யாழ்நகரில் பின்வரும் இடங்களில் விசேட கூட்டங்களை நடாத்துவரர்

28-3-78 மாலை 5·30 மணி "புஷ்ப மஹால்" 6ம் கட்டையடி, கட்டுடை. மானிப்பாய்
29-3-78 மாலை 5 30 மணி "இயேசு நிலையம் [வாசிகசாலை அருகாமை] உடுப்பிட்டி
30-3-78 மாலை 5·00 மணி "மேதர் மெமோறியல் தேவாலயம்" மானிப்பாய்
31-3-78 மாலை 5·00 மணி "சீயோன் தேவாலயம்" யாழ்ப்பாணம் [சாந்தி தியேட்டர் அருகாமை]
1-4-78 காலை 9·00 மணி" ரிச்லன்ட்ஸ்" கூழாவடி சேர்ச் லேன், ஆனைக்கோட்டை
1-4-78 மாலை 5·00 மணி "சீயோன் தேவாலயம்" யாழ்ப்பாணம்
2-4-78 காலை 9·00 மணி ,, ,,
மாலை 6·00 மணி ,, ,,

அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்

8884

## திருமண அழைப்பு

### சிறீதரன்—மாதினி

1—4—78 சனிக்கிழமை முற்பகல் 11-00 மணி தொடக்கம் 12-00 மணி வரையிலுள்ள சுபவேளையில், காங்கேசன்துறைவீதியில், கொக்குவில் தபாலிலையத்திற்கு எதிரே அமைந்திருக்கும் மஞ்சவனப்பதி ஆலயத்தில் நடைபெறவிருக்கும்

சிறீதரன் — மாதினி

திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு எங்களின் மாணவர்கள், நண்பர்கள், சுற்றத்தார் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ. முத்துத்தம்பியும் துணைவியாரும் கரவெட்டி.

செ. சதாசிவமும் துணைவியாரும் கொக்குவில்.

8887

ஈழநாடு
The Eelanaadu

# "பதவியுயர்வு, இடமாற்றங்களில் கூட்டணி எம். பி.க்கள் தலையிடக்கூடாது"

## கொழும்புக்கிளை தீர்மானம் கொண்டுவருகிறது

(கொழும்பு)

"பதவியுயர்வு, இடமாற்றம் போன்ற தனிப்பட்ட விக்கல்களை தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் எவரும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தலையிடக்கூடாது" என்று கோரும் தீர்மானம் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக் கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கிறது.

ஏப்ரல் முதலாம் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் பிரேரிக்கப்படவிருக்கும் ஏனை சில தீர்மானங்கள் பின்வருமாறு:

தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒரு கிழமையில் ஒரு நாளையாவது இயக்க வேலைகளுக்காகப் பயன்படுத்த வேண்டுமெனவும், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூன்று நாட்களையாவது இயக்கவேலைகளுக்காகப் பயன்படுத்தவேண்டு வேண்டுமெனவும் இக்கிளை வலியுறுத்துகிறது

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்துக்கும், கிளைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென இக்கிளை வலியுறுத்துகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் அமைப்பு வேலைகளில் அதிதீவிரமாக ஈடுபடுவதோடு, உணர்ச்சியை மட்டும் வளர்க்காது தமிழினத்தின் பழைய வரலாறு தமிழ் ஈழத்தின் முக்கியத்துவம், அதை அடைவதற்கான வழிவகைகள், வேறு நாட்டு விடுதலை இயக்கங்களின் வரலாறு முதலியவற்றை விளக்கி அரசியல் வகுப்புக்களை நடத்தவேண்டுமெனவும் இக்கிளை வலியுறுத்துகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனக்கென ஒரு யாப்பினை உருவாக்கி அதற்கு அமைய செயற்படவேண்டுமென 1975ஆம் ஆண்டு நடைபெற்ற வட்டுக்கோட்டை மாநாட்டுத் தீர்மானம் ஒன்று அனுப்பியிருந்தோமென்றும் இந்நாள் வரை தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு யாப்பினைக்கொண்டு இயங்காமையை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாக ஒரு யாப்பினை உருவாக்கி அதன்படி ஒழுக வேண்டுமெனவும் அதற்கு மாறாகச் செயல்படுபவர் யாராக இருப்பினும் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இக்கிளை வலியுறுத்துகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலகத்தில் தினமும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தானும் வருகைதந்து மக்களின் பொதுத்தொல்லைகளை அறிந்து அவற்றுக்கு ஆவன செய்ய வேண்டுமென இக்கிளை வலியுறுத்துகிறது.

தமிழ் ஈழத்தில் மூலப்பொருட்களைக் கொண்டு சிறு கைத்தொழில்களை ஆங்காங்கே தொடக்கவும், கடற்றொழில், வேளாண்மை ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் விருத்திசெய்யவும், தக்க நடவடிக்கைகளை அரசினது துணை கொண்டோ இன்றேல் தனியாரின் துணை கொண்டோ எடுத்தல் வேண்டும். (உ)

## கடற்றொழில் அந்நியருக்கு அனுமதி

உள்நாட்டில் மலிவாக மீன் கிடைக்கும்பொருட்டு நமது நாட்டு கடல்பிராந்தியத்தில் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் வந்து மீன்பிடிப்பதற்கு அனுமதியளிக்கப்போவதாக கடற்றொழில் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

உள்நாட்டு கடற்றொழிலாளரின் தொழிலைப் பாதிக்காத வகையில் வெளிநாட்டு மீன்பிடிப்படகுகள் ஆழ்கடலில்தான் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுமென்றும் நமது கடல்பிரதேசத்தில் கரையிலிருந்து இருபத்தைந்து மைல் தூரத்துக்குள் வெளிநாட்டு மீன்பிடியாளர் மீன்பிடிக்க அனுமதிக்கப்படமாட்டார்களென்றும் இந்த எல்லைக்குள் உள்நாட்டுகடற்றொழிலாளரே மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார்.

சமீப காலமாக வெளிநாட்டு மீன்பிடிக்கப்பல்கள் நமது நாட்டின் கடல் பிராந்தியத்தில் வந்து மீன்பிடித்துச் செல்வதுபற்றிப் பலரும் புகார் செய்ததுடன் இதுபற்றி தேசிய அரசுப் பேரவையிலும் எடுத்துச் சொல்லப்பட்டது.

இப்போது கடற்றொழில் அமைச்சரே வெளிநாட்டு மீன்பிடிக்கப்பல்கள் நமது நாட்டுகடல்பிராந்தியத்தில் மீன்பிடிப்பதற்கு அனுமதியளிக்க முன்வந்திருக்கிறார்.

உள்நாட்டில் மீனின்விலை அதிகரித்திருப்பது உண்மைதான். இதைக் குறைப்பதற்கு வேறு வழிகளைப்பற்றி ஆலோசித்துச் செய்வதற்குப் பதிலாக அந்நிய மீன்பிடிப் படகுகளை இங்கு வந்து மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பது 'ஒட்டகத்துக்கு இடம்கொடுத்த அராபியனின் கதை'யாக முடியக் கூடும்.

நமது கடற்றொழிலாளருக்கு நவீன மீன்பிடிப்படகுகளும் மீன்பிடி உபகரணங்களும் மலிவான விலையில் சுலபமாகக்கிடைக்கக்கூடிய வசதிகளைச் செய்து கொடுத்து மீன்பிடித் தொழிலில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் உதவியுடன் அவர்களுக்கு நல்லபயிற்சியுமளித்தால் நமக்குத் தேவையான மீன்மட்டுமல்லாமல் நாமே வெளிநாடுகளுக்கு மீன் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையும் ஏற்படுமென்றுநிச்சயமாகச் சொல்லலாம்.

கடலால் சூழப்பட்டுள்ள நமது நாட்டில் மீன்பிடித் தொழிலையே வாழ்க்கையாகக் கொண்டுள்ள மக்கள் உழைப்புச் சக்தியில் எவருக்கும் எந்த விதத்திலும் குறைந்தவர்களல்லர்.

ஆனால் அவர்களுக்குநவீன மீன்பிடி உபகரணங்களோ, படகுகளோ, போதியபயிற்சியோ இல்லை.

வெளிநாட்டுக் கடற்றொழில் நிறுவனங்கள் நமது கடல்பிராந்தியத்தில் வந்து மீன்பிடித்துச் செல்வதற்கு அனுமதியளித்தால் நமது மீன்களை நாமே தகரத்தில் அடைத்த வெளிநாட்டுமீன்களாக வாங்கநேரிடும். இப்போதும்கூட நாம் கடலின் நடுவிலிருந்தும் வெளிநாட்டுத் 'தகர டப்பா மீன்களை' இறக்குமதி செய்து உண்ண வேண்டிய பரிதாப நிலையிலிருக்கிறோம் என்பது உண்மையே!

வெளிநாட்டு மீன்பிடிக்கப்பல்களை நமது கடல் பிராந்தியத்திற்குள் வந்து மீன்பிடிப்பதற்கு அனுமதியளிப்பதை விடுத்து மீன்பிடித் தொழிலில் முன்னேற்றமடைந்துள்ள ஜப்பான், ஹொங்கொங், சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து மீன்பிடிப்படகுகள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று நமது நாட்டில் கடற்றொழிலை விருத்திசெய்வதே விவேகமாகும்.

இங்கு கடற்றொழிலை விருத்திசெய்தால் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்திசெய்வதுடன் தகரத்தில் மீன்களை அடைக்கும் தொழிற்சாலைகள் பலவற்றையும் நிறுவலாம். இதன் மூலம் பலருக்குவேலைவாய்ப்பும் கிடைக்கும்,

எனவே வெளிநாட்டுமீன்பிடிக்கப்பல்களை நமது பிரதேசத்துக்குள் அனுமதிக்கும் திட்டம்பற்றி கடற்றொழில் அமைச்சும் அரசாங்கமும் மறுபரிசீலனை செய்வது அவசியம்.

## இன்று ஆசிரியர் சங்க வைர விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி ஆசிரியர்சங்கத்தின் வைரவிழா யாழ். இந்துக் கல்லூரியில் இன்றுமாலை நடைபெறவிருக்கிறது.

வைரவிழா மலர் வெளியீட்டு விழாவும் இடம்பெறும்.

இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எச். என். பெர்னாண்டோ, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு இ. சிவநேசன், திரு. இ. பானுதேவன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

திரு. ரி. விஸ்வநாதன் வைர விழா மலரை வெளியிட்டு வைப்பார். (உ)

## அடுத்த ஆண்டில் கச்சதீவில் அன்னதானம்

[வண்ணார்பண்ணை]

அடுத்த ஆண்டு கச்சதீவு உற்சவகாலத்தின்போது இரு தினங்கள் கச்சதீவில் அன்னதானம் இடம்பெறும்.

இம்முறை கச்சதீவிற்கு விஜயம்செய்த சில சமூக சேவையாளர்கள் இதுபற்றி ஆலோசனை செய்துள்ளனர். கச்சதீவு செல்லும் இலங்கை யாத்திரிகர்கள் உணவின்றிக் கஷ்டமுறுவதை அவதானித்த இவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்

"தண்ணீர் உணவு பெறக்கூடிய இடங்களில் அன்னதானம் செய்வதைவிட கச்சதீவில் அன்னதானம் செய்வது சிறந்த தானமாக அமையும். என்று இது சம்பந்தமாக ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் ஒருவர் தெரிவித்தார். (வ)

## 2 கன்றுகளை ஈன்ற பசு

[யாழ்ப்பாணம்]

முரசுமோட்டையில் பசு ஒன்று இரண்டு கன்றுகளை ஈன்றுள்ளது.

முரசுமோட்டை 2-ம் யூனிட்டில் வசிக்கும் திரு. கி. பரமசிவத்தின் பசுவே இரண்டு கன்றுகளையும் ஈன்றுள்ளது.

இவை இரண்டும் வெள்ளை நிறப் பசுக்கன்றுகள் ஆகும். பசுவும் கன்றுகளும் ஆரோக்கியத்துடன் உள்ளன. (இ)

# சோஷலிஸ நாட்டு பிரதிநிதிகள்-வி. பி. சந்திப்பு

## செந்தமிழர் இயக்கக் கொள்கைகளை விளக்கினர்

(கொழும்பு)

செந்தமிழர் இயக்கத்தின் அமைப்பாளர் திரு வி.பொன்னம்பலம் கடந்த வாரம் கொழும்பில் இடதுசாரி இயக்கங்களின் தலைவர்களையும் சோஷலிஸநாட்டுப் பிரதிநிதிகளையும் சந்தித்து தமது இயக்கத்தின் நோக்கங்கள், கொள்கைகள் பற்றி நேரில் எடுத்து விளக்கினர்.

செந்தமிழர் இயக்கத்தின் கொழும்பு மாவட்டக்கிளை அமைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பங்குகொள்வதற்கென திரு. வி. பொன்னம்பலம் கொழும்பில் கடந்த நான்கு நாட்களாக தங்கியிருந்து பல நிகழ்ச்சிகளிலும், கூட்டங்களிலும், சந்திப்புகளிலும், கலந்துரையாடல்களிலும் கலந்துகொண்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்குப் பொறுப்பான அமைப்பு வேலைகளைப்பற்றிப் பொறுப்பேற்கவுள்ளோர் கலந்துகொண்ட கூட்டத்தில் பின்வரும் அமைப்புக்குழு நியமிக்கப்பட்டது.

திருவாளர்கள் செ. சிங்கநாயகம் (செயலாளர்), சிவா சுப்பிரமணியம், வி. சிவலிங்கம், ஐ. சாந்தன், என். சோமகாந்தன் (ஈழத்துச்சோமு) சிலன் கதிர்காமர், வி. என். பரராஜசிங்கம், நந்தகார்த்திகைக்குமரன் ஆகியோர் கொண்ட குழு நிறுவப்பட்டது.

கொழும்பில் பல பாகங்களிலும் இதுவரை சேர்ந்துள்ள அங்கத்தவர்களில் பெரும் பகுதியினர் ஏப்ரல் மாதம் 9-ம் தேதி நடைபெறவுள்ள முதலாவதுமாநாட்டில் கலந்துகொள்ள ஆர்வம் தெரிவித்துள்ளனர் என்று திரு. பொன்னம்பலம் கூறினர்.

கொழும்பு மாவட்டத்திற்கென நிரந்தர நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்கத்தக்க தலைமைப்பீடத்தைத் தெரிவு செய்வதற்காக மாவட்ட மாநாடு ஒன்று விரைவில் நடத்தப்படுமென்றும் அவர் கூறினர். (இ)

## கும்பாபிஷேகம்

[சுழிபுரம்]

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீமகாலட்சுமி அம்பாளுக்கும் ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்திக்கும் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 29-ம் திகதி நடைபெறவிருக்கிறது. (உ)

## மணிவாக்கு

கண்களுக்கு இமைகள் சாந்தி அளிப்பதுபோல உழைப்புக்கு அமைதி நிறைந்த ஓய்வு வேண்டும்.

—தாகூர்

# சித்தன்கேணி அபிவிருத்தி: எம். பி. உறுதி

(சித்தன்கேணி)

சித்தன்கேணிப் பகுதியில் சிறந்த கைத்தொழில் நிறுவனம் ஒன்றை அல்லது 4 கைத்தொழில்களை ஆரம்பித்து அப்பகுதியில் வேலையற்றிருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு தா. திருநாவுக்கரசு தம்மைச் சந்தித்த குழுவிடம் உறுதி அளித்தார்.

சித்தன்கேணி கிராம மக்கள் சார்பில ஆசிரியர் திரு. சிவரத்தினம் கந்தசாமியின் தலைமையிலான குழு ஒன்று எம். பி.யைச் சந்தித்து கிராமத்தின் தேவைகளை எடுத்துக் கூறியது.

கீழ்க்காணும் தேவைகளை நிறைவேற்றித்தர உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. திருநாவுக்கரசு குழுவினரிடம் உறுதிஅளித்தார்.

சித்தன்கேணி எறை பெயருக்குக் காரணமாக யாழ்-காரைநகர் வீதியில் அமைந்திருக்கும் கேணியை உடனடியாகத் திருத்தம் செய்தல்.

சித்தன்கேணி இளைஞர்களுக்கு கினிநொச்சிப் பகுதியில் அடிப்படை வசதிகளுடன் ஒரு ஏக்கர் வீதம், விவசாயக் காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

குடியிருப்பு வசதியற்றவர்களுக்கு வீடமைப்புத் திட்ட வசதி செய்து கொடுத்தல்.

சுழிபுரம், பண்ணாகம், தொல்புரம், சித்தன்கேணி, சங்கானை, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் ஆகிய பகுதி மக்களின் வசதி கருதி சாவகச்சேரியிலிருந்து சுன்னாகம் ஊடாக சுழிபுரம் வரை சேவையாற்றும் 775-ம் இலக்க பஸ் சேவையை சங்கானை ஆஸ்பத்திரிவரை சென்றுவர நடவடிக்கை எடுத்தல்.

மின்சார வசதி இல்லாத பகுதிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுத்தல். (இ)

## நெடுந்தீவில் இராமிய வங்கி

[யாழ்ப்பாணம்]

நாளை நெடுந்தீவு செல்லும் ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா. பொ இரத்தினம், அங்கு கிராமிய வங்கி ஒன்றை அன்று திறந்து வைப்

(4-ம் பக்கம் பார்க்க)

சாந்தி (யாழ் நகர்) போன்: 7648.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஆனந்தன்...லீலா...எம். ஆர். ராதா...நாகேஷ்...மனோரமா
— புதிய பிரதி —
நாகமலை அழகி நடனங்கள் கலரில்
மந்திரஜாலங்கள், சண்டைகள் நிறைந்த படம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி—சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை
(ரெக்னிக் கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி. கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
சின்னஞ்சிறு உலகம்
(புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்: ஜி. ஆர்:—வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

Rio Jaffna (Phone: 7607)
Daily 10-30 a. m. 4-45, 7-00 and 9-45 p.m
Elizabeth, Ashley, Joe, Don Baker, JimKelly
in
GOLDEN NEEDLES
(ஒரு பெண்ணின் கராட்டிச் சண்டை பிரமாதம்)
Color (Advance Booking for Families Accepted) Scope

வின்ஸா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிசந்திரன், கே. ஆர். விஜயா,
விஜயகுமார்-நிர்மலா, அசோகன், மனோரமா
நடித்த
K. R. G. பிக்ஷர்ஸ்
ஜானகி சபதம்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
இரகப்பிரவேசம் (கலர்)

லிடோ (யாழ். நகர்)
போன் 7698
முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

கடைசி மூன்று தினங்கள் மட்டும்
ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா
நடித்த
பணக்கார பெண்
31-ம் திகதி முதல்
வாடைக்காற்று

2nd Crowded week
2வது ஜனத்திரள் வாரம்
Regal (Jaffna) Daily 4-30, 7-00 and 9-30 p.m.
Starring Three of the World's Most Popular Actors
MICHAEL CAINE, DONALD SUTHERLAND, ROBERT DUVALL
Daring attempt by a group of German Paratroopers to Kidnap Britain's Wartime Prime Minister, Winston Churchill
THE EAGLE HAS LANDED
(Color-War film)

# பாலஸ்தீனர் மீண்டும் துப்பாக்கிபிரயோகம்: தென் லெபனானில் ஐ. நா. சமாதானப் படைகள் பின்வாங்கின

ஜெருஸலம், மார்ச் 27

தென் லெபனானில் வித்தானியா ஆற்றங்கரையில் பாலஸ்தீனப் படையினர் நேற்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை அடுத்து அங்கு நிலைகொண்டிருந்த ஐ. நா. சமாதான சுவிஸ் படைகள் பின்வாங்கின.

பாலஸ்தின படையினரின் இச்செயலை ஐ. நா. அதிகாரி ஒருவர் ஜெருஸலத்தில் வெகுவாகக் கண்டித்தார்.

### 10-15 நாட்களில் இஸ்ரேலிய படை வெளியேறும்

இதேவேளையில், இஸ்ரேலில் தங்கியிருக்கும் இஸ்ரேலியப் படைகள் இன்னும் 10 அல்லது 15 நாட்களில் வெளியேறிவிடும் என்று இஸ்ரேலின் வடபிராந்திய இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

இதுகுறித்து இஸ்ரேலிய லெபனான் அதிகாரிகள் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் என்றும் அவர் கூறினார். (இ)

# தமிழ்-சிங்கள இனஒற்றுமைக்கு லயன்ஸ் கழகங்கள் பாலமாக அமையவேண்டும்

## மாவட்ட கவர்னர் வேண்டுகோள்

(மாவிட்டபுரம்)

'மொழி வேறுபாடுகளால் பிளவுகளை வளர்த்து நாட்டின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்காது சகலரும் ஒரேமக்கள் என்ற நினைப்புடன் வாழ வேண்டும். இந்த நிலையை ஏற்படுத்த சிங்களப் பகுதிகளிலும், தமிழ்ப்பகுதிகளிலுமுள்ள லயன்ஸ்கழகங்கள் முன்வரவேண்டும். இவ்விருபகுதிகளிலுமுள்ள லயன்ஸ் கழகங்களிடையே நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு சிங்கள தமிழ் இன ஒற்றுமைக்கு வழிவகுக்கப்படல் வேண்டும்'

இவ்வாறு தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா காங்கேசன்துறை பட்டினசபைக் கருகாமையில் கழகத் தலைவர் சட்டத்தரணி ஆர் ஜே. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற சமயம் அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய லயன்ஸ் கழக மாவட்ட கவர்னர் லயன் ஒலிவின் சில்வா கூறினார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அண்மையில் நமது நாட்டில் நடந்தகலவரநிலை இனியும் ஏற்படாதிருக்க நாம் வழிவகைகள் செய்யவேண்டும். சிங்களப் பகுதிகளிலுள்ள லயன்ஸ் கழகங்கள் மூலம் சிங்களப் பிரதிநிதிகள் தமிழ்ப்பகுதிச் சென்றும், தமிழ்ப் பகுதிகளிலுள்ள லயன்ஸ் கழகங்கள் மூலம் தமிழ்ப் பிரதிநிதிகள் சிங்களப் பகுதிகளுக்குச் சென்றும் நட்புறவை வளர்க்கவேண்டும். நாட்டின் இன ஒற்றுமைக்கு லயன்ஸ் கழகங்கள் ஒரு பாலமாகச் செயல்படவேண்டும்" என்றார்.

தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தலைவர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் தமது உரையில் கூறியதாவது:

லயன்ஸ் கழகமானது சேவையை அடிப்படையாகக் கொண்டதே தவிர பணக்காரர்களினது பொழுதுபோக்குக்காக அல்ல. நமது கழகம் ஆரம்பித்து ஒருவருட காலத்திற்குள் எத்தனையோ சேவைகளைச் செய்துள்ளோம். இலங்கையிலுள்ள 81 லயன்ஸ் கழகங்களில் நாம் ஐந்தாவது இடத்திலும், வடமாகாணத்திலுள்ள 8 லயன்ஸ் கழகங்களில் நாம் இரண்டாவது இடத்திலும் நிற்கின்றோம். எந்த லயன்ஸ் கழகத்திலும் இல்லாதமுறையில் நமது கழகத்தில்தான் முதன்முறையாக எம். பி. ஒருவர் அங்கத்தவராகச் சேர்ந்துள்ளார். நமது கழகம் தொடர்ந்தும் சேவையை கருத்தில்கொண்டு செயல்பட்டு கிராம மக்களது முன்னேற்றத்திற்கு உதவும்" என்றார்.

மற்றும் மாவட்ட உபகவர்னர் டாக்டர் போகு பசுபதி, வடமாகாண லயன்ஸ் கழக தலைவர் திரு. சுப்பிரமணியம், டாக்டர் அத்தனுகியார், பேராசிரியர் கணேசலிங்கம், பிரம்மஸ்ரீ ஐ. வைத்தியநாதக் குருக்கள் ஆகியோரும் பேசினர்.

இதையடுத்து சங்க உறுப்பினர்களுக்கான பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டன. (இ)

## நாடகமன்றம்

(வண்ணார்பண்ணை)

மண்டைதீவு இளங்குரல் நாடகமன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் மண்டைதீவில் நடைபெற்றபோது, பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஆ. சந்திரசேகரன், உபதலைவர்: ச. செந்திலமணி, செயலாளர்: கே. எஸ். இராசலிங்கம், உப செயலாளர்: ந. அருள்நந்திநாதன், பொருளாளர்: அ. ஸ்ரீபத்மராசா.

கதைஆசிரியராக ஏ. எஸ். சோமசுந்தரமும், நாடக இயக்குனராக ஜி. எஸ். இரத்தினகுமாரனும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

## நெடுந்தீவு—

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பரா. புதிய அஞ்சல் அலுவலகத்துக்கான அடிக்கல்லையும் அவர் நாட்டுவார். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க புதிய அமைப்புக்குழுக் கூட்டத்திலும், மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டிகளிலும் திரு. இரத்தினம் கலந்துகொள்வார். (ம)

# 5 ஆபிரிக்க நாடுகளுக்கு அமெரிக்கஆயுதஉதவிஇல்லை

வாஷிங்டன், மார்ச் 27

ஆபிரிக்க முன்னணியின் ஐந்து நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுதஉதவி வழங்கமாட்டாது என்று அமெரிக்க செனட்டர் லோவெட் வாக்கர் தெரிவித்தார்.

ரொடீஷிய கொரில்லாப் படையினருக்கு உதவி செய்து வரும் 5 ஆபிரிக்க நாடுகளுக்கே அமெரிக்கா ஆயுதஉதவிசெய்ய மாட்டாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த 5 நாடுகளும் அமெரிக்காவிடம் ஆயுதஉதவி கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மனநோய்; மதுவெறி: 7 பிள்ளைகளின் தந்தை தற்கொலை

(மாவிட்டபுரம்)

மனநோயும் மதுவெறியும் 7 பிள்ளைகளுக்குத் தந்தையான நபர் ஒருவரது உயிரைப் பறித்து விட்ட சம்பவம் ஒன்று ஏழாலைமைலங்காடுஎன்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

அவ்விடத்தைச் சேர்ந்த வேலன் சின்னத்தம்பி என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. பரமநாதன் விசாரணை நடத்திய சம்பவம் ஏற்கனவே மனநோய் உள்ளவராக காலமானவர் சம்பவதினம் மதுவெறியில் காணப்பட்டாரெனவும், மதுவெறியில் நஞ்சை எடுத்து அருந்திய அவர் மரணத்தை தழுவிக் கொண்டாரெனவும் சாட்சியங்களில் தெரிவிக்கப் பட்டது.

தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

## கி. பி. 11ம் நூற்றாண்டு நந்தி

ஹைதராபாத், மார்ச் 27

கிறிஸ்துக்குப்பின் 11ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கருதப்படும் அழகான நந்தி விக்கிரகம் ஒன்று ஆந்திரப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. (இ)

9-வது வாரம்
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45,
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த் -ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு

வெலிங்டன்
(சுன்னாகம்)
தினசரி: 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
கணேசன்—சுபாஷினி
நான் உங்கள் தோழன்

நாகம்ஸ்
(அச்சுவேலி)
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர். — லதா
நடித்த
நினைத்ததை முடிப்பவன்

# சிறந்த நடத்துநர் தெரிவுப் போட்டி

யாழ்ப்பாணம் றோட்டரிச் சங்கத்தினரால் நடாத்தப்படும் சிறந்த நடத்துனர் தெரிவுப் போட்டி எல்லோராலும் வரவேற்கப்படக்கூடிய ஒரு முன்மாதிரியான சிறந்த திட்டமாகும். பொதுமக்களின் விருப்பத்திற்கேற்பச் சேவை செய்து அவர்களின் நன்மதிப்பையும், நல்லெண்ணத்தையும் பெறுவதற்குச் சகல நடத்துனர்க்கும் ஒரு சந்தர்ப்பத்தை அளித்த நோக்கமாக இத்திட்டம் ஒரு ஊக்குவிக்கும் திட்டமாகவும் அமைந்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இப்படியான முறைகள் மூலம் பொதுமக்களுக்கும் நடத்துனர்க்குமிடையில் ஒரு நல்லெண்ணத் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் பொதுமக்களின் விருப்பு வெறுப்புக்களை நடத்துனர் அறிவதற்கும் அதற்கேற்ப மனப்பக்குவத்தை அடைவதற்கும் உதவியாக இருக்கும். பொதுமக்களின் பஸ் பிரயாணக் கஷ்டங்கள், நடத்துனர் சாரதிகளின் குறைபாடுகள் அடிக்கடி புதினப் பத்திரிகைகளில் விமர்சிப்பதை நாம் தினசரி காணக்கூடியதாக இருக்கிறது. இது ஒருவகையில் ஒருதலைப்பட்சமாகவே விமர்சிக்கப்படுகிறது. இதனால் ஒருசில சாரதி நடத்துனர்களின் குறைபாடுகளினால் சாரதிகளும் நடத்துனர்களும் ஒரே வகையாகவே கணிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகின்றது

அண்மையில் யாழ்ப்பாண வட்டாரத்தைச் சேர்ந்த சகல சாரதி நடத்துனர்க்கும் ஒரு நினைவூட்டற் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த வகுப்புகளில் பொதுமக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்குச் சாரதி நடத்துனர்கள் எவ்வாறு தங்கள் கடமைகளைப் புரியவேண்டுமென்பது மிகவும் தெளிவாக வலியுறுத்திக் கூறப்பட்டது. இதே நேரத்தில் பிரச்சினைக்குரிய சில பொதுமக்கள் பயணிகளாக வந்து சில சந்தர்ப்பங்களில் தங்கள் கடமைக்குக் குந்தகம் விளைவித்த செயல்களையும் இக்கருத்தரங்கில் சாரதி நடத்துனர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. மேலும் தங்களுடைய பிரச்சினைகளுக்குப் பொதுமக்கள் கவனம் செலுத்துவது மிகவும் அரிதெனவும் சுட்டிக்காட்டினார்கள். இதில் ஓரளவு உண்மையும் இருக்கத்தான் செய்கிறது.

தினசரி பொதுமக்களுடன் இணைந்து தொடர்புகொள்ளும் தொழில்களுள் பஸ் குழுவினர் தொழில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை யாரும் ஒத்துக்கொள்வர். குறிப்பாக நடத்துனர்கள் தமது கடமை நேரத்தில் சமூகத்தில் பலதரப்பட்ட, பல மட்டங்களில் உள்ள பிரயாணிகளுடன் தொடர்புகொண்டு சேவையாற்றவேண்டிய நிலையிலிருக்கின்றார்கள். பஸ் வண்டியில் இப்படிப்பட்ட பலதரப்பட்ட பொதுமக்கள் பயணிகளாக வரும்போது அவர்கள் வெவ்வேறு மனநிலையிலிருப்பார்கள். அவர்களின் மனநிலைக்கேற்பத் திருப்தியளிக்கக்கூடிய வகையில் நடத்துனர் தமது கடமையைச் சரிவரச் செய்யவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். இந்த நிலையைச் சமாளிப்பது நடத்துனர்களுக்கு ஒரு பெரும் சவாலாக அமைகின்றது. ஆகவே நடத்துனர் தொழிலைச் செய்வதற்குத் தம்மைத் தயார்நிலையில் வைப்பதற்குச் சில மனப்பக்குவத்தை அடையவேண்டும்; இது ஒரு சாதாரண விடயமாகப் பொதுமக்களுக்குத் தோன்றலாம். ஆனால் ஒரு

**நா. பற்குணம்**
(பிரதி வட்டாரக் கட்டுப்பாட்டதிகாரி இ. போ. ச. யாழ்ப்பாணம்)

நடத்துனரைப் பொறுத்தமட்டில் இந்த மனப்பக்குவத்தை அடைவதற்குத் தினசரி பல சோதனைகளுக்கு ஆளாகின்றார்கள். இந்தக் கண்ணோட்டத்துடன் பொதுமக்கள் நடத்துனர்களைப் பார்ப்பார்களாக இருந்தால் அவர்களின் பிரச்சினைகள் ஓரளவு விளங்கக்கூடியதாக இருக்கும்.

சாதாரணமாக ஒரு நடத்துனர் தனது $7\frac{1}{2}$ மணித்தியால கடமைநேரத்தில் குறுகியசேவைகளாக இருந்தால் கிட்டத்தட்ட 1500 சீட்டுக்களை வழங்குகின்றார்கள். அதாவது 1500 பயணிகளைச் சந்திக்கிறார்கள். இதில் பருவகாலச் சீட்டுக்கள் அடங்கவில்லை. இதன்படி அனேகநேரத்தில் ஒரு நிமிடத்தில் 3க்கும் மேற்பட்ட பிரயாணிகளுடன் தொடர்பு ஏற்படுகின்றது, இப்படியான பிரச்சினைகள் ஏற்படும்போது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட சில சந்தர்ப்பங்களில் நடத்துனர் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர். இந்நேரங்களில் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவைப்படுகின்றது. கீழ்க் கூறப்பட்டுள்ள விடயங்கள் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்குகளில் "குழுவினரின் சிந்தனைக்கு" என்ற தலைப்பின் கீழ் கூறப்பட்டது.

### குழுவினரின் சிந்தனைக்கு

1. செய்யும்தொழிலே தெய்வம்.
2. நேரம் பொன்னானது. திரும்பிப்பெறமுடியாதது.
3. சீருடையுடன், சிறந்த தோற்றம் கடமையுணர்ச்சியின் ஓர் அறிகுறி.
4. பயணிகள் எமது வாடிக்கையாளர்கள் அவர்கள் திருப்தியே எமது குறிக்கோள்.
5. மட்டற்ற வேகம்! ஐயகோ! வேண்டாம்! கட்டுடைத்த வெள்ளத்திற்குச் சரி.
6. சபையின் சொத்தும் பயணிகளின் உயிரும் உங்களது கையில்.
7. கடமைநேரத்தில் மதுவா! அது மதியைக் கெடுக்கும்.
8. புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கு நாம் முன்மாதிரி
9. பயணிகள் கவனம் உங்கள் பக்கம்! எனவே நடை உடைபாவனை நன்றாக அமையட்டும்.
10. பயணியிடம் மரியாதையை எதிர்பார்ப்பதா! நாம் சிறிது கொடுத்துப் பார்ப்போம்.
11. உங்கள் சேவை எல்லோர்க்கும் தேவை. கடமை! கண்ணியம்! கட்டுப்பாட்டுடன் சேவை செய்யுங்கள்.

## யாழ். றோட்டரி நடத்தும் சிறந்த நடத்துநர் தெரிவு கூப்பன்

நடத்துநரின் பெயர் ..............................

பதிவு இலக்கம் ..............................

அனுப்புபவரின் பெயர் ..............................

அனுப்புபவரின் விலாசம் ..............................

திகதி ..............................

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்திசெய்து டாக்டர் பா. சோ. பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)

---

அச்சுவேலி ப. நோ. கூ. ச. கொள்ளை வழக்கு

# விசாரணைப்பிரதி வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கொள்ளை வழக்கில் விசாரணைப் பிரதி நேற்று 3ம் எதிரியின் சட்டத்தரணிக்கு வழங்கப்பட்டது. 1ம், 2ம் எதிரிகளுக்கும் இப்பிரதிகளை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 77ம் ஆண்டு செப்டம்பர் 12ம் தேதி அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 40,000 ரூபாவைக் கொள்ளையடித்ததாக, நாராயணசாமி அருமைச்சந்திரன், கனகராசா ரமணகரன், ந. உதயணன் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி எஸ். சண்முகசுந்தரம், சட்டத்தரணி கே. பி. எஸ். வரதராசா ஆகியோர் ஆஜரானார்கள். 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜே. ஏ. பி. செரிபிம், சட்டத்தரணி ஆர். ஈ. ரத்தினசிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள்.

3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம். சோமசுந்தரம், சட்டத்தரணி கனகமனோகரன், சட்டத்தரணி எம். சிறிகாந்தா ஆகியோர் ஆஜரானார்கள்.

அரசதரப்பில் சட்டத்தரணி டி. பி. குமாரசிங்கா, சட்டத்தரணி ஆர். ஐ. கனகரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள்.

வழக்கு விசாரணையை நீதிபதி மே மாதம் 29ம் தேதிக்கு ஒத்திவைத்தார். தொடர்ந்து 5 நாட்கள் விசாரணை நடைபெறும்.

வவுனிக்குளம் சம்பவம் ஒன்றில் தொடர்பாக கைது செய்யப்பட்டு, இவ்வழக்குக்கு தேவைப்பட்டவராக பொலிசார் கருதப்பட்ட சந்தேக நபரான சௌந்தரராஜன், நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். இவ்வழக்குடன்

(6ம் பக்கம் பார்க்க)

---

இரண்டாயிரம் ரூபா

# நம்பிக்கை மோசடி வழக்கு: எதிரி விடுதலை

[யாழ்ப்பாணம்]

இரண்டாயிரம் ரூபா நம்பிக்கைமோசடி செய்ததாக குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

கொழும்பு பி.பி.சி. கம்பனியில் குமாஸ்தாவாக வேலை பார்க்கும் இளையதம்பி ஆறுமுகம், மானிப்பாய் லிக்கர் ஸ்ரோர்ஸ் உரிமையாளரான பா. யோகரட்ணம் என்பவருக்கு சிறநாட்டு குடிவகைகள் பி.சி.சி. கம்பனியில் எடுத்துத்தருவதாகக் கூறி 1977-ம் ஆண்டு ஏப்ரலில் ரூபா 2000/- ஐப் பெற்று அதை நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது

யாழ் நீதவான் க. வ. நவரட்ணம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டு முடிவில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

வழக்காளி தரப்பில் பா. யோகரட்ணம், பா. இன்னம்மா ஆகியோர் சாட்சியமளித்தனர் எதிரி தரப்பில் எதிரி இ. ஆறுமுகம் சாட்சியமளித்தார்.

சட்டத்தரணி ஜிம்மி ராஜரட்ணம் யாழ் விசேஷ துப்புதுலக்குப் பொலிசாரின் உதவியுடன் வழக்கை நடாத்தினர். எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரட்ணம் ஆஜரானார். [ச]

---

## இடமாற்றம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் அரசாங்க செயலக நிர்வாகப் பிரிவில் கடமையாற்றிய திரு. கே. வி. தேவராசா கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கும், திரு. எஸ். சிவராசா கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கும் இம்மாதத்துடன் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இவர்களது இடத்திற்கு பூநகரி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கடமையாற்றிய திரு. வன்னியசிங்கமும், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கடமையாற்றிய திருமதி கே. ரி. முருகேசுவும் இடமாற்றம் பெற்றுள்ளனர். [அ]

---

## சாவகச்சேரி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் தலைவர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம், செயலாளர் திரு. முதலியார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அமரர் குமாரசாமியின் அஸ்தியின் ஒரு பகுதியை இங்கு கொண்டுவந்து. கீரிமலையில் கரைப்பதற்கான ஏற்பாட்டை செய்ய ஒரு குழு தெரிவு செய்யப்பட்டது.

ஞாபகார்த்த குழுத்தலைவராக திரு. ஆர். ரி சுப்பிரமணியமும், இணைச்செயலாளர்களாக திரு. இராபரமேஸ்வரன், திரு. ஜெயா ஆகியோரும், தனாதிகாரியாக திரு. லோகேஸ்வரனும். பத்து கமிட்டி உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (க-அ)

---

மிதிபலகையில் சென்ற

# பஸ் கண்டக்டர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

வேகமாக சென்ற பஸ்ஸில் மிதி பலகையில் சென்ற பஸ் கண்டக்டர் வெளியில் வீசப்பட்டதால் படுகாயமடைந்தார்.

காயமடைந்த கண்டக்டரான என். எம். நிஸார் உடனடியாக யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சில்லாலையிலிருந்து இந்த பஸ் யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்தபோதே ஆனைக்கோட்டை சார்ச்சுக்கு சமீபத்தில் இச் சம்பவம் நடந்தது.

உடனடியாக பஸ் நிறுத்தப்பட்டு கண்டக்டர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார் (ச)

---

## ட்ராக்டர் திருட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புனியம்போக்கணையிலிருந்து உழவு இயந்திரம் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இதுபற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (உ)

---

## த. வி. கூட்டணி குப்பிழான்கிளை

(யாழ்ப்பாணம்)

குப்பிழான் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை மாலை தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. பொ. நடனசிகாமணி, துணைத்தலைவர்: திரு. இ. கந்தையா, செயலாளர்: திரு. அ. பீ. வைத்தியநாதன், துணைச் செயலாளர் திரு. த. அம்பிகைபாகன், பொருளாளர்: திரு த. ஸ்ரீஸ்கந்தராசா.

செயற்குழு உறுப்பினர்களாக பத்துப்பேர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (அ)

# தொகுதி தோறும் ஆயிரம் பேருக்கு வேலை; இவர்களுக்கு முதலிடம்

(யாழ்ப்பாணம்)
தொழில்வங்கி மூலம் தொகுதிக்கு ஆயிரம் பேருக்கு வேலை வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ், ஊர்காவற்றுறை தொகுதியில், எந்தவித மாதச்சம்பளமும் பெறாதகுடும்பத்திலுள்ள அங்கத்தவர்களுக்கே வேலை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்தார்.

அடுத்ததாக 200 ரூபாவுக்கு குறைந்த மாதச் சம்பளம் பெறுபவர் உள்ள குடும்பத்தினருக்கும் அடுத்து 3000 ரூபாவுக்குக்குறைவாக மாதச் சம்பளம் பெறும் குடும்பத்தில் உள்ளவர்களுக்குமே முன்னுரிமை வழங்கப்படும் என்றும் பண்டிதர் கூறினார்.

இத்திட்டத்தின்கீழ் வேலை வழங்கும்போது குடும்பத்தின் நிதிநிலைமை குறித்து முக்கிய கவனம் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (இ)

# "பிரிவினை வாதத்தால் பிரச்னைகள் தீராது!"

—சண்முகதாசன்

(வெள்ளவத்தை)
"தமிழினம் தன்னைத்தானே ஆளுவதன்மூலம் பிரச்னைகள் தீர்ந்துவிடாது! அப்படி தீர்ந்துவிடுமென்று சிலர் கூறினால் தமிழகம், வங்காள தேசம், பாகிஸ்தான், ஜேர்மன் ஆகிய நாடுகளில் பிரச்னைகள் தீருவதாக இல்லை தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழ பிரதேசசுயாட்சி வழிவகுக்கும்"

இவ்வாறு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற வித்தியோதய வளாக கலைவிழா கருத்தரங்கில் உரைநிகழ்த்திய சீன சார்பு கம்யூனிஸ்ட்கட்சி பொதுச்செயலாளர் திரு நா சண்முகநாதன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

இதுகாலவரை ஆட்சிக்கு வந்த எந்த அரசும் தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கவில்லை, அதற்குப் பதிலாக அநீதிகள் தான் நடந்துள்ளன, அடியும் உதையும்தான் கிடைத்தன, மாறி மாறி பதவிக்கு வரும் அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எத்தகைய நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை.

"பிரிவினைவாதம் பேசுவதால் பிரச்னைகள் தீர்ந்துவிடாது. நாட்டைப் பிரிக்க முற்படும்பொழுது, நாட்டின் பொருளாதாரம் சீர்குலையும், முற்போக்கு சக்திகள் பிரிக்கப்பட்டு, முற்போக்கு எண்ணங்கள் செயல்படுத்தப்பட மாட்டாது. "பேரவையில் முற்போக்கு திட்டங்கள் சமர்ப்பிக்கப்படும்பொழுது அதற்கு எதிராக குரல் எழுப்பியவர்கள் தமிழ்த் தலைவர்கள் இத்தகைய முதலாளித்துவ தலைவர்களே தமிழினத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்துள்ளனர்.

இன்று ஆட்சியிலுள்ள முதலாளித்துவ அமைப்பினுள் தமிழ்மக்களின் பிரச்னைக்கு மாத்திரமல்ல, எத்தகைய பிரச்னைகளுக்கும் தீர்வுகாண முடியாது, தொழிலாளர் வர்க்கத்தின் ஆட்சி ஏற்பட்டால் தான் பிரச்னைக்கு தீர்வும் தமிழினத்திற்கு விடிவும் ஏற்படும், இனம் தபேதமற்ற சமதர்ம சமத்துவ சமுதாயத்தை பாட்டாளி வர்க்க தலைமையில் ஏற்படும் ஆட்சியில்தான் அமைக்கமுடியும்" என்றார்,

மற்றும் செந்தமிழர் இயக்க பொதுச்செயலாளர் திரு வி பொன்னம்பலம், ஜனாப் ஷுகூர் மௌலானா ஆகியோரும் கருத்துவழங்கினர்.

# மிதிபலகையில் சென்ற மூவர்

## மின்கம்பத்தில் மோதுண்டனர்!

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணம் நாவலர் சந்திக்கருகில் நடந்த பஸ் விபத்தில் மிதிபலகையில் சென்ற மூன்று பிரயாணிகள் படுகாயமடைந்தனர்!

இவர்கள் மயக்கமடைந்த நிலையில் உடனடியாக யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வீதிவழியாக சென்ற இந்த பஸ்ஸின் மிதிபலகையில் சென்றவர்கள் மின்கம்பத்தில் மோதப்பட்டு தூக்கிவீசப்பட்டதாக இச்சம்பவம்பற்றி கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைசெய்து வருகின்றனர். (க)

## ஏ. ஜி. ஏ. அலுவலகத்திற்கு காணி தெரிவு

[யாழ்ப்பாணம்]
பருத்தித்துறையில் வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குப் புதிய கந்தோர் ஒன்று கட்டுவதற்கு உதவிஅரசாங்க அதிபராக இருந்த திரு த மார்க்கண்டுவின் முயற்சியினாலும் ஆலோசனைகளாலும், புதிய கட்டிடம் அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்வதற்கு அவர் சமர்ப்பித்த மாற்று ஆலோசனைகட்கு அமைய அரசாங்கம் பருத்தித்துறை வாடிவீட்டுக்கும் நீதிபதியின் வாசஸ்தலத்துக்கும் இடையே உள்ள காணியை பொறுப்பேற்றுள்ளது.

இவ்வாரம் கொழும்பில் இருந்துவந்த நிலஅளவையாளர்கள், மதிப்பீட்டாளர்களை கச்சேரிக் காரியாலய உதவியாளர் திரு எஸ். கணேஷ் கூட்டிவந்து. இதுபார்வையிடப்பட்டன

இக்கட்டிடத்திற்கான செலவை மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கித் தரும்படி கேட்டுக்கொண்டதற்கு இணங்க திரு. க. துரைரத்தினம் எம். பி. நிதிஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளார். (உ)

## இறுதிவரை உறுதியுடன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இரண்டாயிரத்து ஐந்நூறு வருட சரித்திரத்தை மறந்தவர்களாவார்கள்.

"வருங்காலத்தில் போதனா மொழி எவ்வாறு அமையும் என்பதில் எமது சந்ததி பெரும் மனக்குழப்பத்திலிருக்கிறது. மூன்று மொழிகளில் விரும்பிய மொழிகளில் கல்வி கற்கலாம் என்று கருத்துக்களை தெரிவிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட மொழியில் ஆசிரியர்கள் விரிவுரையாளர்கள் இல்லாதிருந்தால் என்ன செய்வது? அதனால் யாருக்கு என்ன பயன் பயன்?

"ஒரு மாணவன் ஆரம்பக் கல்வியை ஜி. சி. ஈ. வரை தமிழிலே கற்றுவிட்டு, அதன் பிறகு ஆங்கிலத்தில் கற்க வாய்ப்பிருந்தால் என்ன செய்யமுடியும்? ஆங்கிலேயர் 30 வருடங்களாக, இந்நாட்டிடிருந்து போனபின்பு, தங்கள் வீடுகளில் ஆங்கிலம் பேசுபவர்களுக்குத்தான் இது ஒரு சலுகையாகும்.

"மாணவர் சமுதாயத்தைத் தரம்படுத்தல் முறை, கடந்த ஏழு வருடங்களாகப் பாதித்துள்ளதென்பதை யாரும் மறுக்கமுடியாது. தரப்படுத்தல் நீக்கப்பட்டதென்று கூறப்படுகிறது. உண்மை, என்ன நடக்கப்போகிறதென்பது பல்கலைக்கழக அனுமதிக்குப் பின்னர்தான் தெரியும்?

"இந்நாட்டில் கல்வி; தகுதியுடையோர்க்கு வழங்கப்படவேண்டும். அரசு, ஒவ்வொரு வளாகத்தையும் ஒரு மொழி புகட்டும் பல்கலைக்கழகமாக அமைக்கவேண்டுமென்று அரசு அவாக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இளஞ் சந்ததிகளான மாணவர் சமுதாயம் இன்று நமது பிரச்னையை நன்குணர்ந்துள்ளது. எந்த இனமோ, எந்த மொழியோ வாழ்வதற்கு ஒரு நாடோ பிரதேசமோ தேவை. இதை இப்போது நமது எதிரிகளும் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

"அண்மையில் நடைபெற்ற கம்யூனிஸ்கட்சி மாநாட்டு அறிக்கையில்கூட, அவர்களின் கொள்கைத் திட்டங்களில் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங்கவேண்டுமென அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். சோஷலிஸப் புரட்சி நடத்திய நாடுகள்கூட, சிறிய தேசிய இனங்களின் விடுதலைக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளன. தீவிரவாத இடதுசாரிச் சக்திகள்கூடச் சுயநிர்ணய அடிப்படையில் இப்பிரச்னைகள் தீர்க்கவேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கிறது. வரலாறு கண்ட இனமான நாம். இறுதிவரை உறுதியுடன் நின்று எமது உரிமைகளைப் பெற்றே தீருவோம்; இது உறுதி."

'வித்தியோதயம்" என்ற மலர் வெளியிடப்பட்டது. திரு. க. தர்மகுணசிங்கம் நன்றியுரை கூறினார்.

## அகதிகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
காடுவெட்டுதற்கு முற்பணம் எதுவும் தராததினால் எல்லோரும் தங்கள் எதிர்காலத்தை யிட்டு ஏங்கிக்கொண்டிருப்பதாகவும் கூறினார்.

### குற்றச்சாட்டு

உலக உணவு ஸ்தாபனம் வழங்கிய எந்த உணவும் தமக்கு வழங்கப்படவில்லையென்றும் அவர் கூறினார்.

டாக்டர்கள் அங்கு வருவதில்லையென்றும், அதனால், பலர் நோயுற்று படுக்கையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை வசதியில்லாததினால், சிறுவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கஷ்டநிலை காரணமாக நோயுற்ற பிள்ளைகளுக்கு மருந்து வாங்கவும், உணவு வாங்கவும், பலர் அமெரிக்கா வழங்கிய 'பெட்ஷீட்டை'யே விற்றுவிட்டார்கள். என்றும் அவர் தெரிவித்தார்.

சிலர் கூடாரங்களையே விற்கவேண்டியநிலைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றனராம்.

வெப்பம் தாங்காமல் பலருக்கு கூவைக்கட்டு, சின்னமுத்து செங்கமாரி போன்ற நோய்கள் ஏற்பட்டு அவஸ்தைப்படுவதாகவும் கூறினார்.

ஒருநாள் மட்டும் பௌசரில் குடிநீர் வழங்கப்பட்டதாகவும் அதன்பின் நீர் வழங்கப்படவில்லையென்றும் திரு வி அடைக்கன் கூறினார்.

### தண்ணீர் பிரச்னை

25 அடிக்கு கீழ்தான் தண்ணீர் பெறமுடியுமென்றும், இதனால் காடுகளை வெட்டினாலும் விவசாயம் செய்வது பெரும் சிக்கலான விஷயம் என்றும் அவர் கூறினார்.

தினமும் யானைகள் தொல்லை அதிகரித்துவருவதாகவும், பகலில் கூட யானைகள் நடமாட்டம் இருப்பதாகவும் இதனால் காணிகளுக்கு செல்லமுடியாமல் இருப்தாகவும் கூறினார்கள்.

தினமும் நிலைமை மோசமாகிக்கொண்டிருப்பதாகவும் பட்டினி மரணம் அதிகரித்து வருவதாகவும் கூறினார்கள்.

## சமரசம் —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப், யாழ். எம். பி. திரு. என். யோகேஸ்வரன், கிளிநொச்சி காணி அதிகாரி திரு மக்பூல் ஆகியோரும் மற்றும் சமூகசேவைப்பகுதியினரும் நாவாந்துறைக்கும், பொம்மைவெளிக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

### அரசாங்க அதிபர் கருத்து

யாழ். அரசாங்க அதிபர் திரு. ஏ ஏ ஜோசப் நேற்றிரவு "ஈழநாடு"க்கு மேற்படி சம்பவம்பற்றி தெரிவிக்கையில்;. தனிப்பட்ட ஒரு சிலரின் குரோதத்தினால் தேவையற்ற அசம்பாவிதம் நிகழ்ந்துவிட்டது என்றும் இப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட முழுமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்

"பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளும்வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இப்பகுதியில் பூரண பொலிஸ் பாதுகாப்பு தொடர்ந்திருக்கும் இதற்கான நடவடிக்கைகளை யாழ். பொலிஸ் அதிபர் மேற்கொண்டுள்ளார் சமூகசேவைப் பகுதியினரும் எல்லா உதவிகளையும் வழங்குவார்கள்"

இதே நேரத்தில், இருதரப்பினரையும் சமரசப் பேச்சுக்கு அழைக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன

இருதரப்பினருக்குமிடையே ஏற்பட்ட மோதல்கள் தொடர்பாக நாலுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

## ஆணாக மாறிய —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வித்தார்

ஆணாகவிருந்து. திருடிய பின்னர் பெண்ணாக மாறிய இப் பெண்ணின் பெயர் அம்மானு அன்னக்கிளி என்றும் இவர் வவனியாவைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இப்படியான 'திடீர் ஏற்பாட்டு' கோஷ்டிகள் கோவில் உற்சவகாலங்களில் நடமாடுவதாகவும் பொதுமக்கள் கவனமாக இருக்கவேண்டும் என்றும் பொலிசார் எச்சரித்துள்ளனர்.

## ஆயிரம்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ந்து வட்டுக்கோட்டை, துணைவி என்ற இடத்தில் 30 வீடுகள் நிறுவப்படும். நாவற்குழியில் 100 வீடுகள் மத்திய வகுப்பினருக்கு அமைக்கப்படும்.

இத்திட்டத்திற்கமைய ஒவ்வொரு தொகுதிகளிலும் குறைந்தது 30 வீடுகளாவது நிறுவப்படும். இதற்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்ட வீடமைப்புத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதுதவிர, வீடுகட்டுபவர்களுக்கு 40,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை வீடமைப்பு இலாகா கடனாக வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்துள்ளது. (செ)

## விசாரணைப்—

(5-ம் பக்கத்தொடர்ச்சி)
இவர் சம்பந்தமில்லை என அரச சட்டத்தரணி தெரிவித்ததை தொடர்ந்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டார்.

## மரண அறிவித்தல்

### பவளக்கால் நடராசா

பவளக்கரல் நடராசா 27-3-78 திங்கட்கிழமை மாலை 8-00 மணியளவில் காலமானார். இவர், கனகம்மாவின் அன்புக் கணவரும், இலங்கை மின்சாரச் சபையின் இளைப்பாறிய பொதுமுகாமையாளர் சண்முகராசா, கொழும்பு மாநகரசபை பிரதான் பொறியியலாளர் ரங்கநாதன், யாழ். மனோகரா தியேட்டர் பத்மநாதன், முகாமையாளர் யோகநாதன், சற்குணபாலதேவி, சந்திரபாலதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மாவதி, ராசலெட்சுமி, கௌரியம்மா, மல்லிகாதேவி, சிவகுமாரன் (குடும்பக் கட்டுபாட்டு இலாகா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியதர்சினி, சித்திரலேகா, ரவிபிரகாஷ், ரஞ்சினி, றஜனி, ஹேமமாலினி, ரவிச்சந்திரன், நிர்மலா, வத்சலா, சிவானி, சிவசங்கரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 29-3-78 புதன்கிழமை காலை 10-00 மணியளவில் வண்ணை கோம்பயன்மணல் மயானத்திற்கு இறுதிக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர் 8888

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 88-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka